# கஞ்சம்பட்டி திரு.S.சௌந்திரராஜன் ஆற்றிய சமுதாயப் பணிகள்.

பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம்-கோவை மாவட்டம் கஞ்சம்பட்டி திரு.**எஸ்.சௌந்திரராஜன்** அவர்கள். முன்னாள் துணைப் பெருந்தலைவர், பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், Ex தலைவர் கஞ்சம்பட்டி ஊராட்சி பெற்றோர் ஆசிரியர் கழகம், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் மற்றும் 1986-2017 வரை தொடர்ந்து ஊ.ஒ.தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி கஞ்சம்பட்டி பெற்றோர் ஆசிரியர் கழகம் தலைவராக செயல்பட்டு வருகிறார்.

மதிப்பிற்குரிய எஸ்.சௌந்திரராஜன் அவர்கள் சமுதாய நலன், மக்கள் சேவையில் தன்னை பள்ளிப்பருவத்திலேயே ஈடுபடுத்திக் கொண்டவர். 27 வயதில் கஞ்சம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராகவும், பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம் துணைப்பெருந்தலைவராகவும் பணியாற்றி பல வளர்ச்சிப் பணிகளுக்கு தன்னிலமற்ற சேவையுணர்வுடன் செயலாற்றி மக்களின் மனதில் தனியிடம் பெற்றுள்ளார்.

**பள்ளிகள் வளர்ச்சிப்பணிகள் :**

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை தரம் உயர்த்தி 1993ல் உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தவும், மேலும் 2012 ஆம் ஆண்டு அருட்செல்வர் N.மகாலிங்கம் ஐயாவிடம் 2 லட்சம் நிதி பெற்று அரசுக்கு செலுத்தி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தியும், ஆங்கில வழிக்கல்வி கொண்டு வந்துள்ளார். நபார்டு திட்டத்தில் 1 கோடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

**போக்குவரத்து வசதி :**

கிராமப்புற மாணவர்கள் உயர்கல்வி பெற பல உதவிகள்: அரசுப்பேருந்து தட வழிகளில் செல்லும்படி போக்குவரத்துக் கழகம் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பி போக்குவரத்து வசதி செய்து உதவியுள்ளார்.

**பாரதப் பிரதமர் பாராட்டுக்கடிதம் :**

வளர்ச்சிப் பணிகள் ஆற்றியது தொடர்பாக முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுடன் தொடர்பு கொண்டு கடிதம் மூலம் பாராட்டு பெற்று பஞ்சாயத்துராஜ் அடிப்படை செயல்பட்டு திட்ட ஆணையைப் பெற்றுள்ளார். இதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

**ஊராட்சி ஒன்றியம் கஞ்சம்பட்டி பள்ளிகள், பொள்ளாச்சி :**

பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம் பல பள்ளிகளில் நற்பணி மன்றங்கள், இலக்கியக் கட்டிடங்கள், நாட்டுப்புற கலை, இலக்கியப் படைப்புகளுக்கு தலைமை ஏற்று பல நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.

மேற்கண்ட பொருள் சார்பாக இணைப்பு இணைக்கப்பட்டுள்ளது.

ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி கஞ்சம்பட்டி 1961ல் பெருந்தலைவர் காமராஜரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

1961ல் **பெருந்தலைவர் காமராஜர்** அவர்களால் ஊ.ஒன்றிய நடுநிலைப்பள்ளிக் கட்டிடம் பள்ளி தரம் உயர்த்தி தொடங்கி வைத்துள்ளார். அவரது பெரிய தந்தையார் ஊராட்சி தலைவராக இருந்துள்ளார்.

**திரு.எஸ்.சௌந்திரராஜன்** அவர்கள் குடும்பத்தார் 1954ல் ஊராட்சி மன்றம் தொடங்கிய காலத்திலிருந்து 2006 வரை ஊராட்சி மன்றத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். அன்னார் ஊராட்சி மன்றத் தலைவராகவும், துணைப் பெருந்தலைவர் பொள்ளாச்சி(தெற்கு) ஒன்றியத்தில் பதவி வகித்து சிறப்பித்துள்ளார்.

தன்னலம் கருதாத-ஏழை எளிய மக்களின் நலன், ஏழைக் குழந்தைகளின் கல்வி நலன் காக்கவும் இன்றும் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டு பொது நலச் சேவையில் ஈடுபாட்டுடன் பணியாற்றி வருகிறார்.

பள்ளி விளையாட்டு மைதானம் பொதுமக்கள் பங்களிப்புடன் 1 ஏக்கர் நிலப்பரப்பினை 2 ஏக்கர் நிலப்பரப்பு அடைய செயல்பட்டு உள்ளார்.

அரிமா சங்கம், அருட்செல்வர் **நா.மகாலிங்கம்** அவர்களாலும், பேரவை உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் நிதி உதவியால் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டிடங்கள், சமையல் அறை, சுற்றுச்சுவர் வசதி செய்து தந்துள்ளார். குடியரசுத் தலைவர் அவர்கள் பாராட்டி கடிதம் எழுதியுள்ளார். நன் மதிப்பினைப் பெற்றுள்ளார்.

**நூலகம் :**

கஞ்சம்பட்டியில் அரசு கிளை நூலகம் அமைக்க 5 செண்ட் இடம் தானமாக வழங்கி பொதுமக்களை விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியுள்ளார். இதன் நில மதிப்பு சுமார் ரூ.2,50,000/- ஆகும். (இன்றைய மதிப்பு ரூ.5 லட்சம் ஆகும்).

**பொது சுகாதாரம் :** ஆரம்ப சுகாதார நிலையம் அமைய நிலத்தின் மதிப்பு :

கஞ்சம்பட்டி ஊராட்சி மற்றும் அதனைச் சார்ந்த 30 கிராம மக்கள் பயன்பெறும் வகையில் 3 ஏக்கர் நிலம் கொடுத்து ஆரம்ப சுகாதார மையம் நிலம் தானமாக வழங்கியுள்ளார். அதன் மதிப்பு சுமார் ரூ.15,00,000/- (பதினைந்து லட்சம்) ஆகும். தனது தாய்மாமன் K.M.இராமலிங்கம் நினைவாக 3 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. (இன்றைய நிலமதிப்பு 2 கோடி ஆகும்).

**வங்கி சேவை :**

கஞ்சம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட விவசாயப் பொதுமக்கள் நலன் கருதி மத்திய Reserve Bank கடிதம் தொடர்பு கொண்டு லட்சுமி விலாஸ் வங்கிச் சேவையை கொண்டு வந்துள்ளார்.

**பொதுமக்கள் சேவை :**

ஏழை – எளிய மக்கள் நலனில் ஆதி-திராவிடர் மக்களுக்கு மாவட்ட ஆட்சியர் மூலம் வீட்டுமனைப் பட்டாக்கள் பெற்று வீட்டுமனைகள் அமைய பாடுபட்டுள்ளார். 25.03.1991ல் திருமதி முத்தம்மாள், க/பெ.காளியப்பன் அவர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்கு பாரதப் பிரதமரிடம் நிதி உதவி பரிந்துரை பயன்பெறச் செய்துள்ளார். சுமார் 200 பேர் முதியோர் உதவித்தொகை பெற்றுத் தந்துள்ளார், ரோடு வசதி, கான்கிரீட் பாதை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. குடிநீர் நமக்கு நாமே திட்டத்தில் தனது சொந்த நிதி பத்தாயிரம் செலுத்தி ஆழ்குழாய் கிணறு மேல்நிலை தண்ணீர்த்தொட்டி செய்து தரப்பட்டது.

மேலும், பிரிசிதா சேவா சங்கம் மூலம் தலித் (ஆதிதிராவிடர் மக்களுக்கு 72 வீடுகள் மற்றும் பசுமை வீடுகள் IAY திட்டம் வீடுகள் 300 வீடுகள் மற்ற பொதுமக்களுக்கு 350 வீடுகள் கட்டி தரப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் சேகரிப்பு ஊராட்சி சுற்றியுள்ள ஓடைகளில் விவசாய பொறியியல் துறை மூலமாக 10க்கு மேற்பட்ட கசிவுநீர் குட்டைகள் கட்டி தரப்பட்டு, நிலத்தடி நீர் மேம்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு உதவப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்களுக்கு ரேசன் கார்டுகள், மேலும் மாணவர்களை கல்லூரியில் சேர்த்துவிடுதல், வங்கிகளில் கல்விக்கடன் பெற்று தருவது, அவர்கட்கு வேலை வாய்ப்பு கிடைக்க உதவிபுரிவது போன்ற பணிகள் செய்து தரப்பட்டுள்ளது. மேலும் வீதி விளக்குகள் நிறைய பொருத்தப்பட்டு உள்ளது. மேலும் கழிவுநீர் வாய்க்கால் கட்டப்பட்டுள்ளது. வீட்டிற்கு ஒரு கழிப்பிடம் அரசு மானியத்துடன் கட்டி கொடுக்கப்பட்டு தூய்மை கிராமமாக மாற்றப்பட்டுள்ளது.

டாக்டர் மகாலிங்கம் பொறியியல் கல்லூரி மூலம் பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு கருவி நிறுவப்பட்டது. மேலும் MLA நிதியிலிருந்து மேல்நிலைப் பள்ளிக்கு 10 லட்சம் மதிப்பீட்டில் டெஸ்க் பென்ச் வழங்கப்பட்டது. மேலும் MLA நிதியில் 12 கணினிகள் பெறப்பட்டது. மேலும் பெருமாள் கோவில், அமணலிங்கேஸ்வரர் கோவில் மும்மூர்த்தி(பிரம்மா, விஷ்ணு, சிவன்) காளியம்மன், மாரியம்மன் கோவில் இவர் மூலம் திருப்பணி உதவி செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஊராட்சி தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக வளர்ந்து, ஊராட்சியில் உள்ள வசதிகள் :

1. ஊராட்சி மன்ற அலுவலகம்
2. கிராம நிர்வாக அலுவலகம்
3. துணை மேலாண்மை விரிவாக்க அலுவலகம்
4. நியாய விலைக்கடைகள் - மூன்று
5. கிளை நூலகங்கள்
6. சமுதாய நலத் திருமண மண்டபம் - மூன்று
7. சௌடேஸ்வரி நெசவாளர் கூட்டுறவு சங்கம்
8. அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் சித்த மருத்துவ பிரிவு
   30 படுக்கை கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்
9. கால்நடை மருத்துவமனை
10. ஊ.ஒ.தொ.பள்ளிகள் - மூன்று
11. அரசு மேல்நிலைப்பள்ளி
12. அங்கன்வாடிப் பள்ளிகள் – நான்கு
13. உதவி மின்பொறியாளர் அலுவலகம்
14. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு கிளைச் சங்கம்
15. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
16. லட்சுமி விலாஸ் வங்கி
17. தொலைபேசி நிலையம் – Telephone Exchange
18. அஞ்சல் நிலையம்
19. வேளாண்மை விலைப்பொருள் வைப்புக்கிடங்கு மற்றும் உலர்களம்
20. மக்கள் மனமகிழ் மன்றம்
21. மகளிர் சுய உதவிக்குழுக்கள் – 52
22. தாய் சேய் நல விடுதி

இத்தனை வசதிகள் ஒரே ஊராட்சியில் வருவதற்கு அரும்பாடுபட்டவர். அவை அனைத்தையும் நடத்தி செல்பவர் இவரே என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடம் : பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம்.



கஞ்சம்பட்டி **எஸ். சௌந்திரராஜன்** அவர்கள்

முன்னாள் துணைப் பெருந்தலைவர் – பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம்

தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகம்

பொதுக்குழு உறுப்பினர்


# தேசத் தலைவரும் - கிராமத் தலைவரும்
# வீடியோ கான்பிரன்ஸ் உரையாடல்



கஞ்சம்பட்டி உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்த வீடியோ கான்பிரன்ஸ்
வாயிலாக முன்னாள் ஜனாதிபதி

திரு. **A.J.P. அப்துல்கலாம்** அவர்கள்

கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சி சார்பான
உரையாடல் நடத்தியுள்ளார்



1973. ஆம் ஆண்டு பெருந்தலைவருடன்
திரு. எஸ். சௌந்திரராஜன் அவர்கள்
எடுத்துக் கொண்ட புகைப்படம்.




அகில உலக அரிமா சங்கத் தலைவர்
அமெரிக்கா நாட்டை சேர்ந்த திரு.ஜைம் இர்வின்
கத்சம்பட்டி தொடக்கப்பள்ளிக்கு நமக்கு நாமே
திட்டத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு
ரூ. 68000/- காசோலை பெற்றோர் ஆசிரியர்
கழகத் தலைவரிடம் வழங்கப்பட்டது



1986 . கலையரங்கம் திறப்பு விழா




1989 - சமுதாய பாலிடைக்னிக் கருத்தரங்கம்
போபால்



1987 - பள்ளி ஆண்டுவிழா



தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகம் - விருது



அரசு ஆரம்பச் சுகாதார நிலையம்
திறப்பு விழா



1989-90 . ஊராட்சி அலுவலகம்


கட்டிடத் திறப்பு விழா




1993 . உயர்நிலைப்பள்ளி தரம் உயர்த்திய ஆண்டு
சுதந்திர தின விழா




1994. பள்ளி ஆண்டுவிழா



1996 - ஆம் ஆண்டு

பள்ளி குடியரசு தினவிழா



2005 பள்ளி ஆண்டு விழா



2008 சுதந்திர தினவிழா
தொடக்கப்பள்ளி மற்றும்
உயர்நிலைப் பள்ளி.

அனுப்புநர்:

முனைவர் பி.ப. செல்வகுமாரி,
செயலாளர்,
தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம்,
சென்னை-600 006

பெறுநர்:

தலைமையாசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, கந்தம்பட்டி,
கோயம்புத்தூர்.

ந.க.எண்: 4203/அ/2007, நாள்: 24-11-2008

அன்புடையீர்,

பொருள் : தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம், சென்னை-6 – மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் விவரம் கோருதல் - சார்ந்து.

------

தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக பொதுக்குழு உறுப்பினராக தங்கள் பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் வருவாய் மாவட்டப் பெற்றோர் ஆசிரியர் கழகத்திலிருந்து தேர்வு செய்து அனுப்பியுள்ளது.

அன்னாரை பற்றிய விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து மறு தபாலில் உடன் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர்.

<u>பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரைப் பற்றிய விவரம்</u>

| | | |
|---|---|---|
| பெயர் மற்றும் வீட்டு முகவரி | : | S. ஜெனிந்திரராஜன், தலைவர், பெற்றோர் ஆசிரியர் கழகம், அரசு உயர் / தொடக்கப்பள்ளி, கந்தம்பட்டி (P.O) விநாயகர் கோவில் வீதி, பொள்ளாச்சி (T.K). |
| தொலைபேசி எண் | : | வீடு - 284267. செல். 9940796366 |
| பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவராக பணியாற்றி வரும் காலம். | : | 1986 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 23 ஆண்டுகள். |
| தற்போது பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரின் மகனோ / மகளோ பள்ளியில் பயின்று வருகின்றனரா | : | ஆம் / இல்லை<br>செல்வராஜ் ஐயாவின் மகன் S. கிஷோர்குமார் கல்வி உதவி பெற்று வருகிறார். |
| ஆம். எனில் மகனோ / மகளோ பயின்று வரும் வகுப்பு மற்றும் பெயர். | : | S. கிஷோர்குமார் - வகுப்பு - IV |
| அன்னார் பள்ளிக்கு ஆற்றிவரும் சேவைக் குறித்த விவரம். | : | பின்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது. |

தலைமையாசிரியர்
கையொப்பம்.
(பள்ளி முத்திரையுடன்)